ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2088/25 - 2018 සැප්තැම්බර් මස 11 වැනි අඟහරුවාදා - 2018.09.11
*2088/25 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம்**

*2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்தினால் (திருத்தம்) கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் 58அ ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இத்துடன் தரப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு சுற்றுலாப் பிரயாணிகள் சேர் பெறுமதி வரி மீளளிப்புத் திட்டம் தொடர்பில் பின்வருவனவற்றினை விதித்துரைத்து இக்கட்டளையினைப் பிறப்பிக்கின்றேன்.*

(I) *(1) ஆம் உட்பிரிவின் விடயம் (அ) இன் கீழான பொருட்கள் ;*
(II) *(1) ஆம் உட்பிரிவின் விடயம் (ஆ) இன் கீழான பொருட்களின் பெறுமதி ;*
(III) *ஒரு மீளளிப்புத் திட்டம்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, செத்தெம்பர் 11.*

*அட்டவணை*

**சுற்றுலாப் பயணிகளின் பெறுமதிசேர் வரி மீளளிப்புத் திட்டம்** (TVRS)

*பகுதி* I *- உட்பிரிவு (1) இன் விடயம் (அ) இன் கீழான பொருட்கள் :*

*பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டு சுற்றுலாப் பிரயாணி ஒருவரினால் கொள்வனவு செய்யப்பட்டு அவர் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்கையில் அத்தகைய பொருட்கள் இலங்கையிலிருந்து வெளியகற்றப்படுகின்ற அத்தகைய பொருட்களில் பின்வரும் பொருட்கள் தவிர்ந்தவை :-*

(I) *போத்தலில் அடைக்கப்பட்ட நீர் ;*
(II) *வாயு நிரப்பப்பட்ட நீர் ;*
(III) *சமைத்த உணவுகள் ;*
(IV) *முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நுகரப்பட்ட பொருட்கள்.*

பகுதி II - உட்பிரிவு (1) இன் விடயம் (ஆ) இன் கீழான பொருட்களின் பெறுமதி :

பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டு சுற்றுலாப் பிரயாணி ஒருவரினால் கொள்வனவு செய்யப்பட்டு அவர் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்கையில் இலங்கையிலிருந்து வெளியகற்றப்படுகின்ற அத்தகைய பொருட்களின் பெறுமதி ஐம்பதாயிரம் ரூபாவுக்கு (50,000) குறையாமல் இருப்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை வியாபாரியொருவரிடமிருந்து நாளொன்றுக்கு மூன்றிற்கு (3) மேற்படாத விற்பனைச் சிட்டைகளினைப் பெற்றிருத்தலும் வேண்டும்.

பகுதி III - மீளளிப்புத் திட்டம் :

ஏதேனும் அத்தகைய பெறுமதிக்கு, மீளளிப்புத் தொகையானது பின்னிணைக்கப்பட்ட சமன்பாட்டின் அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

மீளளிப்புத் தொகை = 80% (A x B)

இருப்பின்,

A - இலங்கையிலிருந்து வெளியகற்றப்படுகின்ற அத்தகைய பொருட்களுக்கு செலுத்தப்படுகின்ற பெறுமதிசேர் வரி மீதான பொருட்களின் (பெசே வரி அற்ற) பெறுமதி ;

B - பெறுமதிசேர் வரி வீதம்.

9-718

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.